மாக, குடும்ப நல, குழந்தைகள் நலத் திட்டங்கள், திட்டப் பணிகள் இரண்டு தொடங்கப் பெற்றன. 1969–70–ல், கோயம்புத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கனபாளையத்தில் ஒன்றும், மதுரை மாவட்டம் ஆத்தூரில் ஒன்றுமாக மேலும் இரண்டு திட்டங்கள் தொடங்கப் பெற்றன. இவற்றைத் தவிர, வேறு திட்டங்கள் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

One orchard for each district.

*** 717 *Q.*—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether as, has been recommended by the Estimates Committee, it is proposed to establish one orchard for each district, when there are assured irrigation facilities available ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இம் மாநிலத்தில், எட்டு மாவட்டங்களில் ஒன்பது மாதிரிப் பழத் தோட்டங்கள் செடி வளர்ப்புப் பண்ணைகள் முன்னமேயே உள்ளன. இருப்பினும், பாசன வசதி உறுதி யாகக் கிடைக்கும்போது மாவட்டம் ஒவ்வொன்றிலும் பழத் தோட்டம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து மதிப்பீட்டுக் குழு செய்த பரிவுரை அரசின் ஆலோசனையில் உள்ளது.

முதலமைச்சரின் இலங்கைப் பயணம்.

***732 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலங்கைப் பயணம் எப்போது என முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிவந்த கலைஞர் அவர்கள் தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் ஆட்சிபுரிவதை அறிந்து, அவர்களைக் காண இலங்கைத் தமிழர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில், தமிழக முதல் அமைச்சர் அவர்கள் விரைவில் இலங்கைக்குச் சென்று வர முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் செல்வதற்குத் தடை இல்லை. ஆனால், அவர்கள் அழைப்பதற்குத்தான் தடை விதிக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம் : பொதுவாக சிலோன் நாட்டில் ஏற்பட்டிருக்கிற அரசியல் சந்தேகத்தின் விளைவாக நமது ராஜ்யத்திலிருந்து எந்த டி.எம்.கே. கட்சித் தலைவர்களும் அங்கு வரக் கூடாது என்று அவர்கள் "Ban" செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இதை மத்திய சர்க்காருக்கு, நம்முடைய சர்க்கார் எடுத்துச் சொல்லி, நாங்கள் போவது அங்கே இருக்கிற குழப்பத்தை அதிகப்படுத்துவதற்காக அல்ல, கலாசாரப் பிரசாரத்திற்காகப் போகிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, எப்படியாகிலும் தமிழ்க் கலையை அங்கே பரப்புவதற்கு முதல் அமைச்சர் போக முயற்சிப்பாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்று எதிர்க் கட்சியில் இருந்தபொழுது விரும்பிய நேரத்தில் அப்பொழுது இங்கு இருந்த அரசு தடுத்தது. நான் ஆளும் கட்சிக்கு வந்த பிறகு அங்கிருக்கும் அரசு தடுக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இலங்கை தி.மு.க.-விற்கும், தமிழ் நாட்டிலுள்ள தி. மு. க.-விற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று